மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு அப்படி ஒரு நஷ்டம் ஏற்பட்டதாக சேதம் ஏற்பட்டதாக இப்போது என்னிடத்தில் விவரங்கள் இல்லை. அதனால் இதுபற்றி பதில் கூறமுடியாத நிலையில் இருக்கிறேன். தனியாக கேள்விப் போட்டால் பதில் தரப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கல்லூரி மாணவர்கள் பரீட்சை எழுதி ரிசல்டு காலத்தில் வருவதில்லை. உறிய காலத்தில் வந்தால் சில மாணவர்கள் சில பாடங்களில் வெற்றி பெறாமல் இருப்பார்களானால் அந்தப் பாடத்தைச் சேர்த்து எழுவதற்குப் பணம் செலுத்த அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆனால் இப்போது அனைத்துப் பாடங்களுக்கும் பணம் செலுத்தவேண்டும் என்று கல்லூரியில் வற்புறுத்துகிறார்கள். எந்தப் பாடத்தில் பெயில் ஆனோம் என்று அவர்களுக்கு விரைவாகத் தெரியாத காரணத்தால் சில மாணவர்கள் எல்லாப் பாடத்திற்கும் பணம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைப் போக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதுபோன்று ஒரு பிரச்சினை வந்தது. அதற்குச் சில உதவிகளைச் செய்ததாக என்னுடைய நினைவு. இந்த ஆண்டு இப்படி ஒரு பிரச்சினை இருப்பதாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. வந்தால் அதைப்பற்றி ஆலோசிக்குமாறு பல்கலைக்கழகத்தை நாம கேட்டுக்கொள்ளலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அமைச்சுப் பணியிலுள்ள தகுதிபெற்ற எழுத்தர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கும் திட்டம்.

306—(*வினா எண். 20379)—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வித் துறையில் அமைச்சுப் பணியில் உள்ள ஆசிரியர் தகுதிபெற்ற எழுத்தர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1984 மார்ச் 14]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாடு அமைச்சுப் பணி உட்பட இதர பணிகளில் உள்ள முழுத்தகுதி பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகவும், மேல் நிலைத் தமிழாசிரியர்களாகவும். மேல்நிலைக் கல்விப் பணியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களாகவும், மொழியாசிரியர்களாகவும் நியமனம் பெற தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் மற்றும் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி விதி 2(a) (ii)ன்படி வகை செய்யப்பட்டுள்ளன. மேற் குறித்த பதவிகளில் நியமனம் பெறத் தகுதிபெற்ற ஆசிரியர்கள் எவரும் இல்லாதபொழுது தகுதி பெற்ற அமைச்சுப் பணியாளர்களுக்கு இப் பதவிகளில் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

திண்டுக்கல்-விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம்.

307— (*வினா எண். 20429)— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் 'விளையாட்டுத் திடல்' அமைப்பதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஓர் விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இந்த விளையாட்டுத் திடல் கட்டுவதற்கு அரசு பணம் ஒதுக்கியும், அதற்கான வரைபடங்களை ஏற்றுக்கொண்டும், காண்டிராக்ட் ஒப்பந்தம் முடித்தும், வேலைகள் துவங்குகிறபோது பக்கத்தில் கோயில் என்ற பெயராலே வைத்துக் கொண்டு, திண்டுக்கல் நகர மக்களுக்குப் புறம்பாக, அரசு கொள்கைக்குப் புறம்பாக, அரசு திட்டங்களுக்குப் புறம்பாக சில சமூகவிரோதிகள் உபயோகித்து வருகிற அந்தக் கட்டிடத்தைத் தகர்த்து எறிவதற்கு அதன் மீது அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தி இந்தத் திட்டத்தைத் துரிதமாக அமுல் நடத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*579—580-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.